# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093622

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.பி Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 06/19 Date: நாள் 03.10.19

2. (i) Act சட்டம்: CrPC PC Act 1988 as amended பிரிவு Sections பிரிவுகள்: 41, 102 CrPC
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.10.19 Date to : நாள் வரை 03.10.19
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.30 hrs Time to : நேரம் வரை 21.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.10.19 Time : நேரம் 23.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 23.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ரகசிய தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J. நாகராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. ஜெயராம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1972 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணைக் காவல் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. முத்துகிருஷ்ணன், நிலைய அலுவலர் பொறுப்பு, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், வேடசந்தூர், திண்டுக்கல்
   2. திரு. ராஜகோபால், முன்னணி தீயணைப்பாளர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், நிலக்கோட்டை, திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

03.10.2019 ஆம் தேதியன்று திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய சரகத்திற்குட்பட்ட பட்டாசு நிரந்தர சில்லரை விற்பனை செய்யும் உரிமையாளர்களுக்கு 2019-2020ம் ஆண்டிற்கான பட்டாசு உரிமம் புதுப்பித்து வழங்க வேண்டி ஆய்வு செய்யும் பொருட்டு பட்டாசுக் கடை உரிமையாளர்களிடம் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மதுரை, திண்டுக்கல், தேனி துணை ஆய்வுக்குழு அலுவலக்கு தகவல் தெரிவித்து வரவழைக்கப்பட்டு இன்று 03.10.2019ம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு மணிக்கு திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்குள் மதுரை, திண்டுக்கல், தேனி துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.இரா.திருமலை மற்றும் நான் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த சமயத்தில்

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………..on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்** DSP/VAC/DGL 3/X/19

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**
04.10.2019 – 01.00hrs.

**Name:** பெயர் J. Nagarajan.
**Rank:** நிலை Deputy Superintendent of Police, V&AC, Dindigul

<u>திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.6/2019, ச.பி.41 r/w. 102 கு.வி.மு.ச r/w.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 உடன் ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.</u>

நிலைய தீயணைப்பு அலுவலர் அலுவலகத்தில் திரு.P.முத்துக்கிருஷ்ணன், நிலைய அலுவலர்(போக்குவரத்து), பொறுப்பு நிலைய அலுவலர், வேடசந்தூர் மற்றும் திரு.S.ராஜகோபால், முன்னணி தீயணைப்போர், 6728, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தனர். மற்ற நிலைய தீயணைப்பாளர்கள் மேற்படி நிலைய அலுவலர் அலுவலகத்தை ஒட்டி உள்ள பணியாளர் ஓய்வு அறையில் (1) திரு.K.சீனிவாசன், தீயணைப்போர் ஓட்டி எண், 7152, (2) திரு.V.முத்துப்பாண்டி, தீயணைப்பாளர் எண் 8259, (3) திரு.J.விபின் ஜோதி, தீயணைப்பாளர் எண் 9232, மற்றும் (4) திரு.P.ராஜசேகரன், தீயணைப்பாளர் எண் 8735 ஆகியோர் ஓய்வில் இருந்தார்கள். பின்னர் நான், துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.இரா.திருமலை மற்றும் குழுவினருடன் தீயணைப்பு நிலைய அலுவலர் அலுவலகத்தில் நிலைய அலுவலர் இருக்கையை சோதனை செய்ய நிலைய அலுவலர் பொறுப்பு திரு.முத்துக்கிருஷ்ணன் அவர்களின் இருக்கைக்கு கீழ் மடித்த நிலையில் மொத்தமாக இருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்க ரூ.6990/- இருந்தது. அதேபோல் நிலைய அலுவலர் இருக்கைக்கு எதிரபக்கம் முன்னணி தீயணைப்பாளர் திரு.ராஜகோபால் அமர்ந்திருந்த சேரின் வலது பக்கம் "நம்ம ஆனந்தா சில்க்ஸ் & ரெடிமேட்" என்று எழுதப்பட்டிருந்த கட்டைப்பையை எடுத்து சோதனை செய்ய அதில் பூர்த்தி செய்யப்பட்ட 8 ஆய்வு அறிக்கை, பூர்த்தி செய்யப்படாமல் நிலைய அலுவலர் பொறுப்பு திரு.முத்துகிருஷ்ணன் அவர்கள் 02.10.2019ம் தேதியிட்டு கையொப்பமிட்ட ஆய்வு அறிக்கை படிவங்கள் - 2, 03.10.2019ம் தேதியிட்டு கையொப்பமிட்ட ஆய்வு அறிக்கை படிவங்கள் - 12 மற்றும் மாவட்ட தீயணைப்பு அலுவலர், திண்டுக்கல் அவர்களுக்கு திரு.முத்துகிருஷ்ணன், நிலைய அலுவலர்

பொறுப்பு, வேடசந்தூர் அவர்கள் பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பமிட்டு, 03.10.2019ம் தேதியிட்ட முகப்புக் கடிதம் மற்றும் அதன் உள்ளே பணம் ரூ.25,000/-, ரூ.20,500/-, ரூ.6,200/-, ரூ.1,900, ரூ.650/-, ரூ.1,400/- மற்றும் ரூ.10,000/- என்று தனித்தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த தொகை ஆக மொத்தம் ரூ.65,650/- இருந்தது. மேற்படி கீழே கிடந்த ரூ.6990/- மற்றும் துணிப்பையில் இருந்த பணம் ரூ.65,650/- பற்றியும் விசாரிக்க அப்போது ஆஜரில் இருந்த திரு.முத்துக்கிருஷ்ணன் மற்றும் திரு.ராஜகோபால் ஆகியோரை விசாரிக்க அவர்கள் அந்த பணம் பற்றி தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. அதனால் அந்த பணம் சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணமாக கருதி கைபற்றப்பட்டது.மேலும் முன்னணி தீயணைப்பாளர் திரு.ராஜகோபால் என்பவர் கடந்த 14.07.2019ம் தேதியிலிருந்து நிலக்கோட்டை தீயணைப்பு அலுவலத்தில் பணியாற்றி வருவதாகவும், மாவட்ட தீயணைப்பு அலுவலர் அவர்களின் உத்தரவின் பேரில் வேடசந்தூர் பகுதியிலுள்ள நிரந்தர பட்டாக உரிமம் உள்ள கடைகளில் ஆய்வு செய்து புதுப்பிக்கும் பணிக்காக வேடசந்தூர் நிலைய தீயணைப்பு அலுவலர் பொறுப்பு திரு.முத்துகிருஷ்ணன் அவர்களுடன் சென்று அனைத்து கடைகளையும் ஆய்வு செய்ததாகவும், அதில் 8 கடைகளுக்கான ஆய்வு அறிக்கையினை தானே தனது கைப்பட எழுதி நிலைய அலுவலர் பொறுப்பு திரு.முத்துகிருஷ்ணன் அவர்களிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், மீதமுள்ள கடைகளுக்கு ஆய்வு அறிக்கையை தயார் செய்ய முன் கூட்டியே நிலைய அலுவலர் பொறுப்பு திரு.முத்துகிருஷ்ணன் அவர்களிடம் கையொப்பம் வாங்கி வைத்துக்கொண்டதாகவும், அதன்பிறகு மாலை சுமார் 5 மணி வாக்கில் வேடசந்தூர் தீயணைப்பு நிலையம் வந்ததாகவும் தெரிவித்தார்.. நிலைய ஆவணங்களை பார்வையிட நிலைய இருப்பில் இருந்த பணப்பதிவேட்டின்படி நிலையான முன்பணபதிவேட்டின் வைப்புத்தொகையாக ரூ.200/- உள்ளதும், மனமகிழ்மன்றத்தின் வைப்புத்தொகையாக ரூ.2521/- உள்ளதும் சரியாக இருந்தது. மேற்படி அலுவலர்களிடம் மேற்படி சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த கைப்பற்றப்பட்ட பணம் பற்றி கேட்க யாரும் அதற்கு தகுந்த முகாந்திரம்

தெரிவிக்கவில்லை. ஆகவே மேற்படி மொத்த தொகை ரூ.72,640/- பட்டாசுக் கடை நிரந்தர உரிமம் புதுப்பிப்பதற்காக பட்டாசுக் கடை உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கக் கூடும் என சந்தேகத்திற்கிடமான பணமாக கருதி சாட்சி முன்னிலையில் செயல்முறை நடவடிக்கை 03.10.2019ம் தேதி மாலை சுமார் 17.30 முதல் 21.30 வரை தயார் செய்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்துடன் நிலையம் வந்து நிலைய அலுவலர் அலுவலக அறையில் ஆஜரில் இருந்த நிலைய அலுவலர் பொறுப்பு திரு.முத்துக்கிருஷ்ணன் மற்றும் நிலக்கோட்டை தீயணைப்பு நிலைய முன்னணி தீயணைப்பாளர் திரு.ராஜகோபால் ஆகியோர் மீது திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.6/2019, ச.பி.41 r/w. 102 கு.வி.மு.ச r/w.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 உடன் ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2018ன்படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.72,640/- ஆகியவற்றை திண்டுக்கல் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் மற்ற நகலை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

3/x/19

Deputy Superintendent of Police
Vigilance & Anti Corruption
Dindigul 624 004